| பாடம் | தமிழ்மொழி | திகதி | |
|---|---|---|---|

| தலைப்பு | இலக்கணம் –வலிமிகா இடங்கள் |
|---|---|
| க.தரம் | 5.9 வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| உ.தரம் | 5.9.2 'படி' எனும் சொல்லுக்குப் பின் வலிமிகா என்பதை அறிந்து பயன்படுத்துவர். |

https://bit.ly/3gcruAr
பக்கம் 152

அ. பாடப்பகுதி பக்கம் 152 வாசிக்கவும்
ஆ. வலிமிகா இடங்களை அறியவும் .
இ. பயிற்சிகளைச் செய்து படம் அனுப்பவும் .

## நடவடிக்கை 1

வலிமிகாமல் எழுதுக.

1. அப்பா திருக்குறளை மனனம் செய்யும்படி+பணித்தார்.
2. பந்தை உதைக்கும்படி+கூறி அண்ணன் திடலில் முன்னோக்கி ஓடினார்.
3. உணவு சிதறும்படி+செய்ததால் அம்மா கடிந்து கொண்டார்
4. தம்பி புதிய உடையை வாங்கும்படி+கெஞ்சினான்.
5. பெரியவர் நல்ல கருத்துகளை அறியும்படி+பேசினார்.
6. அத்தை சமைத்த உணவுகளை மூடும்படி+கூறினார் .
7. இராமன் நடந்த சம்பவத்தை நினைக்கும்படி+செய்தார்.
8. கதவைத் திறக்கும்படி+சிறுவன் வேண்டினான்.
9. விதிமுறைகளைப் பின்பற்றும்படி+பெரியவர் வலியுறுத்தினார்.
10. வாகனத்தைக் கவனமாகச் செலுத்தும்படி+தந்தையிடம் அம்மா கூறினார்.
11. மரத்தின் நிழலில் அமரும்படி+பணியாட்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

LIVEWORKSHEETS